

திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட கழக இளைஞரணி சார்பில் என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டியில் போட்டியாளர்களை வாழ்த்தி கழகத் துணை பொதுச்செயலாளர் அமைச்சர் இ. பெரியசாமி பேசினார். உடன் அமைச்சர் அர. சக்கரபாணி, கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் , மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஆனந்த குமார், இளைஞர் அணி அமைப்பாளர்கள் கணேசன், ஹரிஹரசுதன் நடுவர்கள் பொள்ளாச்சி உமாபதி ,புதுக்கோட்டை விஜயா ,சிவ .ஜெயராஜ் ,மதிமாறன், மில்டன், இந்திரகுமார் தேரடி, கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட கழக இளைஞரணி சார்பில் என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டியில் போட்டியாளர்களை வாழ்த்தி அமைச்சர் அர. சக்கரபாணி பேசினார். உடன் கழகத் துணை பொதுச்செயலாளர் அமைச்சர் இ. பெரியசாமி ,கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் , மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஆனந்த குமார், இளைஞர் அணி அமைப்பாளர்கள் கணேசன், ஹரிஹரசுதன் நடுவர்கள் பொள்ளாச்சி உமாபதி ,புதுக்கோட்டை விஜயா ,சிவ .ஜெயராஜ் ,மதிமாறன், மில்டன், இந்திரகுமார் தேரடி, கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு:

# 16 முருகனடியார்களின் பெயர்களில் விருதுகள்!

## உயர்நீதிமன்ற நீதியரசர் பி.வேல்முருகன் வழங்கினார்!

பழனி, ஆக.27-

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இரண்டு நாட்களாக கோலாகலமாக நடை பெற்று வருகிறது. நேற்று முன்தினம் (25.08.2024) நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள் அர.சக்கர பாணி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில் உயர்நீதிமன்ற நீதியரசர் ஆர்.சுரேஷ்குமார் அவர்கள் மாநாட்டு மலரினை வெளியிட்டு சிறப்புரையாற்றுகையில் இப்படிப்பட்ட ஒரு உன்னதமான நிகழ்வை தமிழ் மண்ணிலே அரங்கேற்றிய தமிழ்நாடு அரசுக்கும், இந்து சமய அறநிலையத்துறைக்கும் பாராட்டுகளை தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, யாமிருக்க பயமேன் என்ற தலைப்பில் கலைமாமணி திருமதி தேச மங்கையர்க்கரசி திருமதி சுசித்ரா பால சுப்ரமணியம் குழுவினர், இசைப்பேரரசி டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன் குழுவினரின் இசை நிகழ்ச்சிகள், நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள், பரதநாட்டியம், கந்தன் கருணை அமுதம் எனும் தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் கந்தன் பாடல்கள் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிறைவாக, அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் நிறைவு விழாவில் திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் அருளாசி வழங்கினார். பின்னர், சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் பி. வேல்முருகன் அவர்கள் தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய அடியார்கள், சமயப்பணி புரிந்தோர், சமய சொற்பொழிவாளர்கள், அதிகளவில் திருப்பணி மேற்கொண்டோர், ஆன்மிக மற்றும் இலக்கிய படைப்பாளர்களை சிறப்பிக்கும் வகையில் 16 நபர்களுக்கு பொற்பதக்கம், சான்றிதழ், பொன்னாடை மற்றும் பழனியாண்டவர் திருக்கோயில் பிரசாதம் போன்ற வற்றை வழங்கி சிறப்பித்தார்.

போகர் சித்தர் விருதினை மருத்துவர் கு.சிவராமன், நக்கீரர் விருதினை முனைவர் பெ.சுப்பிரமணியம், அருணகிரிநாதர் இயல் விருதினை திருப்புகழ் மதிவண்ணன், அருணகிரிநாதர் இசை விருதினை வி.சம்பந்தம் குருக்கள், முருகம்மையார் விருதினை மறவன்புலவு க.சச்சிதானந்தன், குமரகுருபர சுவாமிகள் விருதினை முனைவர் பனசை மூர்த்தி, திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் விருதினை பா.மாசிலாமணி, பகழிக்கூத்தர் விருதினை ஜெ.கனகராஜ் , கந்தபுராணக் கட்சியப்பர் விருதினை மருத்துவர் வ. ஜெயபாலன் , வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் விருதினை முனைவர் ந.சொக்கலிங்கம் , மாம்பழக் கவிச்சிங்க நாவலர் விருதினை முனைவர் புலவர் அமுதன் , சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் விருதினை முனைவர் சே.பார்த்த சாரதி, பாம்பன் சுவாமிகள் விருதினை தா.சந்திரசேகரன், தணிகைமணி வா.சு.செங்கல்வராயர் விருதினை முனைவர் வ.வெ.சசிவல்லி, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் விருதினை பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம், தேனூர் வரகவி வே.செ. சொக்கலிங்கனார் விருதினை மா. திருநாவுக்கரசர் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இம்மாநாட்டில் 21 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்விழாவில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பி.வேல்முருகன், பி.புகழேந்தி, வி.சிவஞானம், ஒய்வு பெற்ற நீதியரசர்கள் வி.பாரதிதாசன், ஆர்.பொங்கியப்பன், சொக்கலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில் குமார், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் மு.பெ.சத்தியவேல் முருகனார், சுகி சிவம், திருமதி தேச மங்கையர்க்கரசி, திருமதி ந. திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முத்தமிழ் முருகன் 2-ஆம் நாள் மாநாட்டில் 4 லட்சம் பேர் பங்கேற்றனர்!

## 30-ஆம் தேதி வரை கண்காட்சி நடைபெறுகிறது!

பழனி, ஆக.27

பழனியில் நடைபெறும் முத்தமிழ் முருகன் 2-ஆம் நாள் மாநாட்டில் 4 லட்சம் பேர் பங்கேற்றனர். 30-ஆம் தேதி வரை கண்காட்சி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழனியில் நேற்று முத்தமிழ் முருகன் மாநாடு 2-ஆவது நாளாக தொடங்கியது. பழனி முத்தமிழ் முரு கன் மாநாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்தார். இதையொட்டி ஏராளமான அரங்கங்கள், கண்காட்சிகள் தொடங்கப் பட்டது. இதை காலை முதல் இரவு 11 மணி வரை பக்தர்கள் கண்டுகளித்தனர். கலை நிகழ்ச்சிகளை யும் கண்டு ரசித்தனர். அமைச்சர் சேகர்பாபு இறுதிவரை இருந்து கச்சேரியை பார்த்துக்கொண்டிருந்தார்.

நேற்று 2-ஆம் நாள் மாநாடு காலை 8 மணிக்கு திருவேல் இறைவன், தீ தமிழ் இசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. அதன் பின்பு முருகனும் பரதமும், திருப்புகழ் தேனிசை, யாமிருக்க பயமேன் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நேற்று மாலையில் மாநாட்டு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது. அதன் பின்பு விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்திருந்தார்.

பழனியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு கண்காட்சி ஆகஸ்ட் 30 வரை நீட்டிக்க ப்பட்டுள்ளது. பொதுமக்கள் இலவசமாக பார்வையிடும் வகையில் கண்காட்சியை நீட்டித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

மாநாட்டுக்கு வரும் பக்தர்களுக்கு முருகனின் ராஜ அலங்கார படம், திருநீறு, குங்குமம், பஞ்சாமிர்தம், கந்தசஷ்டி புத்தகம், லட்டு, முறுக்கு உள்ளிட்டவை அடங்கிய பிரசாத பைகள் வழங்கப்பட்டன.

இந்த மாநாட்டில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் சுமார் 4 லட்சம் பேர் கலந்து கொண்டனர்.

### மூத்த பத்திரிகையாளர் கோவி லெனின் தலைமை! சீதை பதிப்பகம் வழங்கும்

# ‘இறுதிச் சொட்டு ரத்தமும் இந்திய அரசியலும்’ நூல்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் வெளியிட டி.கே.எஸ்.இளங்கோவன் பெறுகிறார்!

சென்னை, ஆக. 27-

சீதை பதிக்கம் வழங்கும் “இறுதிச் சொட்டு ரத்தமும் இந்திய அரசியலும்” நூல் வெளியீட்டு விழா 31.8.2024 - சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் சென்னை 18, அன்பகம், அண்ணா மன்றத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மூத்த பத்திரிகையாளர் கோவி - லெனின் தலைமை வகிக்கிறார். கௌரா ராஜசேகரன் வரவேற்கிறார்.

இந்நூலை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் வெளியிட முதல் நூலை முன்னாள் எம்.பி., டி.கே.எஸ். இளங்கோவன் பெற்றுக்கொள்கிறார்.

மூத்த பத்திரிகையாளர் தோழர் இந்திர குமார் நூலை ஆய்வு செய்து சிறப்புரையாற்றுகிறார்.

திருவாரூர் அர.திருவிடம் ஏற்புரையாற்றுகிறார்.

கௌரா ஜெய்கணேஷ் நன்றி கூறுகிறார்.




தேனி வடக்கு மாவட்டம் போடி நகர கழக சார்பாக பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்கு நகரச் செயலாளர் புருஷோத்தமன் தலைமையில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. சிறப்புரை யாற்றினார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர்கள் ராசிசெந்தில், முருகன், கண்ணன், மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜா, ரமேஷ், செயற்குழு உறுப்பினர் சங்கர், நகர மன்றத் தலைவர் ராஜலட்சுமி, சங்கர், கலை இலக்கிய மாவட்ட அமைப்பாளர் நம்பிக்கை நாகராஜ் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம் இஸ்லாமிய தப்லீக் ஜமாஅத் சார்பில் இஸ்திமா நிகழ்ச்சி சாத்தக்கோன் வலசை பகுதியில் நடைபெற்றது. புதுடெல்லி தலைமை இமாம் அவர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில், மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சாமுத்துராமலிங்கம் கலந்து கொண்டு மார்க்க உரைகளை கேட்டு, டெல்லி இமாம் அவர்களின் வாழ்த்துக்களை பெற்றுக்கொண்டார். உடன் இராமேஸ்வரம் நகரக் கழகச் செயலாளர், நகர் மன்றத் தலைவர் கே.இ.நாகர்கான் உள்ளார்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணியின் மதுரை வேட்பாளராக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சு.வெங்கடேசன் எம்.பி., மாபெரும் வெற்றியடைந்ததை அடுத்து மதுரை வடக்கு தொகுதி செல்லூர் பகுதியில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் கழக நிர்வாகிகள் தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள் மூவேந்திரன், செல்லூர் குறும்பன், எம்.ஜி.முத்து, கணேஷ், இளைஞர் அணி சௌந்தர்ராஜன், செல்லூர் அறிவு நிதி எஸ்.வி.சுதன், காவேரி, ராதாகிருஷ்ணன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்ட இளைஞரணி பேச்சுப் போட்டி!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் தலைமை!

கிருஷ்ணகிரி, ஆக. 27 -

கிருஷ்ணகிரியில் மாவட்ட இளைஞரணி சார்பில் ‘என் உயிரினும் மேலான....!’

கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி கிழக்கு மாவட்ட செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது முன்னாள் மாவட்ட கழக செயலாளர் இ.ஜி.சுகவனம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி கல்லூரி மாணவ மாணவியருக்கு கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள ஆர்.கே.வி. ரெசிடென்சியில் நடைபெற்றது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமை வகித்தார்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் வரவேற்புரை ஆற்றினார். இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், சத்தியமூர்த்தி, சங்கர் , லயோலா ராஜசேகர், சங்கர், சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

மேலிட பார்வையாளராக மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரகாஷ் எம்.பி பங்கேற்றார் கழக அமைப்பு துணை செயலாளர் தாயகம் கவி எம்எல்ஏ , மருத்துவர். எழிலன் எம்.எல்.ஏ., மருத்துவர் யாழினி, சௌமியன், ஈரோடு இறைவன் , சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நடுவராக பணியாற்றினார்.


இதில் ஏராளமான கல்லூரி மாணவ மாணவியர் பேச்சுப் போட்டியல் கலந்து கொண்டனர் இறுதியில் 12 மாணவ மாணவியர் மண்டல அளவில் போட்டியில் பங்கு பெற தேர்வு செய்யப்பட்டனர் அவர்களுக்கு சான்றிதழ் கேடயம் தலா ரூ 10,000 வீதம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் 1000 ரூபாய் பரிசாக வழங்கி சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம்,

நகரக் கழக செயலாளர் நவாப் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.ஆர். ராமதாஸ்
### ஆகஸ்ட் 27 (2016)



இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியதோடு, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இராசிபுரம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

இராசிபுரம் நகராட்சித் தலைவராக வெற்றி பெற்று, நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். சேலம் மாவட்ட பொன்னி கூட்டுறவு அங்காடி நிர்வாக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

1962–ல் விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – 1964–ல் சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தனது வாழ்நாள் முழுவதும் மிதிவண்டியிலேயே சென்று கழகப் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**